2012

# தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு




# ஆண்டறிக்கை


NASTEC

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு
இல. 223**C**, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.
தொ.பே: 011-2807945, 2808947, 2807346
தொலைநகல்: 011-2807347, மின்னஞ்சல்: nastecsl@yahoo.com

# தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு

# ஆண்டறிக்கை 2012

NASTEC

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு
இல. 223**C**, நாவல வீதி, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05.
தொ.பே: 011-2807945, 2808947, 2807346
தொலைநகல்: 011-2807347, மின்னஞ்சல்: nastecsl@yahoo.com, இணையத்தளம்: www.nastec.lk

## எம்மைப்பற்றி

1994ம் ஆண்டின் 11ம் இலக்க தேசிய விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அபிவிருத்திச் சட்டத்தின் மூலம் 1998ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு **(NASTEC)** ஸ்தாபிக்கப்பட்டது. இது 1998 டிசம்பர் 6 ஆம் திகதி சம்பிரதாயபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதுடன் 1999 ஜனவரியில் அமுலுக்கு வந்தது. **NASTEC** இலங்கை அரசாங்கத்தின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பிலான மேல்மட்ட கொள்கை உருவாக்கம் மற்றும் ஆலோசனை அமைப்பாக உள்ளது. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு ஜனாதிபதி அவர்களால் நியமிக்கப்படும் ஏழு உறுப்பினர்களை ஆணைக்குழு உள்ளடக்கியுள்ளது.

# பொருளடக்கம்


தொலைநோக்கு மற்றும் செயற்பணி ............ 06

பணிப்பாளரின் செய்தி ............ 07

ஆணைக்குழு உறுப்பினர்கள் ............ 08

நிறுவனத்தின் விபரத் திரட்டு ............ 10

நிர்வாக கட்டமைப்பு ............ 11

விஞ்ஞான, தொழில்நுட்ப மீளாய்வு ............ 12

நாட்டின் விஞ்ஞான, தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய ஆண்டு மீளாய்வு ............ 12

விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு ............ 12

சர்வதேச உறவுகள் ............ 14

*NAM S&T நிலையத்தின் ஊடாக வழங்கப்பட்ட பயிற்சிகள்* ............ 14

ஏனைய NASTEC செயற்பாடுகள் ............ 15

*இளம் விஞ்ஞானிகள் அரங்கம்* ............ 15

*எமது அலுவலர்கள்* ............ 21

*அலுவலர்களின் செய்திகள்* ............ 22

*அலுவலர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள்* ............ 23

நன்றியுரை............ 24

நிதிக் கூற்று ............ 25

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ............ 27

ஆண்டறிக்கை 2012

தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு (NASTEC) செயலகத்தின் ஒரு பிரசுரிப்பு

ஆவணி 2013

## எமது தொலைநோக்கு

**"... விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் பயன்பாட்டின் ஊடாக இலங்கை மக்களின் நன்நிலைத்திருத்தலையும் சுபீட்சத்தையும் மேம்படுத்தும் பொருட்டு அரசாங்கத்திற்கு மதியுரை வழங்குகின்ற மிகச் சிறந்த நிறுவனமாகத் திகழ்தல்..."**

## எமது செயற்பணி

**"... நிலைபேறான அபிவிருத்தியின் பிரயோகத்திற்காக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர் தேசிய இயலுமையைக் கட்டியெழுப்புவதற்கான கொள்கைகள், மூலோபாயங்கள் மற்றும் திட்டங்களை அரசாங்கத்துக்கு வழங்கல்..."**

## பணிப்பாளரின் கூற்று



2012 ஆம் ஆண்டு தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவுக்கு சவால்மிக்கதொரு ஆண்டாக காணப்பட்டது. தலைவர் உள்ளிட்ட ஆணைக்குழு அங்கத்தவர்களின் பதவிக் காலம் 2012 சனவரி மாதத்தில் முடிவடைந்தது. பணிப்பாளர் பதவியானது ஆண்டு முழுவதும் வெற்றிடமாகக் காணப்பட்டது. அனுபவம்வாய்ந்த நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்கள் இருவரில் ஒருவர் 2012 ஆகஸ்ட் மாதத்தில் நிறுவனத்திலிருந்து விலகினார். ஆதலால் ஆணைக்குழுவுக்கு அதன் விதிமுறைக் கட்டளைகளை நிறைவேற்றுகின்றபோது அதன் போதியதல்லாத மனித வளத்துடன் சேர்ந்து பெரும் முயற்சியை மேற்கொள்ள நேரிட்டது.

அதன் பெறுபேறாக ஆணைக்குழுவானது விஞ்ஞான தொழில்நுட்ப கொள்கை மற்றும் திட்டமிடல் விதிமுறைக் கட்டளைகளை புறந்தள்ளிவிட்டு அதன் செயற்பாடுகளை விஞ்ஞான, தொழில்நுட்ப மீளாய்வுக்கு (நிறுவனத்தினதும் நாட்டினதும் நிலைமை) மட்டுப்படுத்தியது. வளி மண்டலவியல் திணைக்களம் மற்றும் நவீன தொழில்நுட்பத்துக்கான ஆதர் சீ. கிளார்க் நிறுவனம் ஆகியன இந்த ஆண்டினுள் மீளாய்வு செய்யப்பட்ட இரண்டு நிறுவனங்களுமாகும். இந்த ஆண்டினுள் மீளாய்வு செய்யும் பொருட்டு திட்டமிடப்பட்டிருந்த ஏனைய இரண்டு நிறுவனங்களும் சுய மதிப்பீட்டு அறிக்கைகளைப் பெற்றுத்தருவதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக அவற்றின் மீளாய்வுகளை 2013 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைப்பதற்கு நேரிட்டது.

பதவியணியினர் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டதாயிருந்த போதிலும் இளம் விஞ்ஞானிகள் ஒன்றியத்தின் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டன. இளம் விஞ்ஞானிகளுக்கான 2 திறன் அபிவிருத்திச் செயலமர்வுகளும், வட மத்திய மாகாண உயர் தர விஞ்ஞானப் பிரிவின் ஆசிரியர்களுக்கான பயிற்சிச் செயலமர்வொன்றும், இளம் விஞ்ஞானிகளுக்கான ஆராய்ச்சி மாநாடொன்றும் இவற்றில் உள்ளடங்குகின்றன.

ஆணைக்குழு வழமையான விதத்தில் விஞ்ஞானிகள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுக்காக சர்வதேச பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகளில் பங்கேற்பதற்கு 'நாம்' நிறுவனத்தின் ஊடாக இலவசமாக வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தது. அதேபோன்று ஆணைக்குழு ஊழியர்களுக்கும் பயிற்சிகளை வழங்கியது.

நான் முன்னைய ஆண்டிலும் எனது கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு, ஊழியர் பற்றாக்குறையானது பதில் பணிப்பாளர் உள்ளிட்ட சிரேஷ்ட பதவியணியினரை அவர்களது பிரதானமான பணிகளிலிருந்து விலகச்செய்து தாழ் மட்டத்திலான நெறிப்படுத்தல்களில் கவனம் செலுத்தச் செய்துள்ளது. அதிகாரிகள் அதன் விளைவை நன்றாகவே அறிந்துள்ள போதிலும் அதனை இன்னமுமே புரிந்துகொள்ளவில்லை.

இறுதியாக, அர்ப்பணிப்புடன் பணியாற்றிய பணியாட்டொகுதி அங்கத்தவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன் என்பதை அறிவிக்க வேண்டியுள்ளதோடு, அவர்களது மனப்பூர்வமான ஒத்துழைப்பு இல்லாதிருந்திருப்பின் நஸ்டெக் நிறவனத்தை அதன் குறிக்கோள்களின்பால் இட்டுச் செல்வதற்கு என்னால் இயலாதிருந்திருக்கும்.

கலாநிதி முதித லியனகெதர
**பதில் பணிப்பாளர்**

# ஆணைக்குழு உறுப்பினர்கள் *(2012 சனவரி 9 வரை)*

**<u>பேராசிரியர் நாளினி பி. ரத்னசிறி</u>**

**தலைவர்**



இலங்கை திறந்த பல்கலைக்கழக Entomologist: Emeritus பேராசிரியர், விவசாய திணைக்களத்தின் Entomologist: Emeritus ஆய்வு அலுவலர் (1966 – 1974), வனபரிபாலன திணைக்களத்தின் Entomologist: Emeritus, ஆய்வு அலுவலர் (1974 - 1983). விலங்கியல் திணைக்களத்தின் ஆய்வு அலுவலர், விலங்கியல் திணைக்கள பேராசிரியர் (1983 – 1986), இயற்கை விஞ்ஞான பீட ஸ்தாபகர் (1986 – 1992), மற்றும் விலங்கியல் பீட சிரேஷ்ட பேராசிரியர் (1996 – 2005), இலங்கை திறந்த பல்கலைக்கழகம், உறுப்பினர் மற்றும் உப தலைவர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (1993 – 1994), தலைவர் GEF/NNDP, சிறிய மானிய நிகழ்ச்சித் திட்ட தேசிய ஊக்குவிப்புக் குழு, அயன மண்டல காடு வளர்ப்பு EU/UNDP தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் உறுப்பினர், பல்கலைக்கழக கல்வி, தேசிய கல்வி ஆணைக்குழு உறுப்பினர், தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு உறுப்பினர் (2003 - இன்றுவரை) தலைவர், தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு (2005 - இன்றுவரை).

**<u>வித்யாஜோதி பேராசிரியர் கே.கே.வை.டபிள்யூ பெரேரா</u>**



இலத்திரனியல் பொறியியல் பேராசிரியர், தலைவர், நவீன தொழில்நுட்பத்துக்கான ஆர்தர் சீ. கிளார்க் மத்திய நிலையம், NERD மத்திய நிலையத்தின் முதல் தலைவர் (1974 – 1977), இலங்கை மின்சார சபையின் தலைவர் (1977 – 1989), வலு, சக்தி அமைச்சின் செயலாளர் (1981 – 1990) மற்றும் (2001 – 2003), இலங்கை பொறியியலாளர்கள் நிறுவனத்தின் தலைவர் (1985 – 1986), வாழ்நாள் பேராசிரியர், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், பணிப்பாளர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் விஞ்ஞான தொழிநுட்ப ஆளணி அபிவிருத்தித் திட்டம் (1997 – 2001).

**<u>பேராசிரியர் எச்.பி.எம் குணசேன</u>**



பயிரியலாளர் பேராதனைப் பல்கலைக்கழக பயிர் விஞ்ஞான வாழ்நாள் பேராசிரியர் (1982), விவசாய ஆராய்ச்சி கொள்கைக்கான சபையின் நிறைவேற்று இயக்குனர் (1982), பீடாதிபதி, விவசாய பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம் (1982 – 1994) தலைவர் வயம்ப வளாகம் (1996 – 1998) பணிப்பாளர் விவசாய பட்டப்பின் படிப்பிற்கான நிறுவனம் (1997 – 2002) அங்கத்தவர் – பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (1999 – 2005), அங்கத்தவர் தேசிய விஞ்ஞான கல்லூரி, ஆலோசகர் – விவசாய அமைச்சு (2007 - முதல் இன்று வரை).

**<u>கலாநிதி சீ.ரீ.எஸ்.பி. பெரேரா</u>**



கைத்தொழில் துறையியலாளர்: நிர்வாக இயக்குனர், வரையறுக்கப்பட்ட தனியார் சம்சன் ரஜரட்ட டைல்ஸ் நிறுவனம், பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட இலங்கை பிரமல் கண்ணாடிக் கூட்டுத்தாபனம், பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட தனியார் தங்கொட்டுவ பீங்கான் கம்பனி, உப தலைவர், பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, சபை அங்கத்தவர், இலங்கை கொடுகடன் தகவல் பணியகம், பணிப்பாளர், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி.

## கலாநிதி பாலித்த அபேகோன்



டாக்டர் (MBBS), சிரேஷ்ட ஆலோசகர் உலக சுகாதார நிறுவனம் மற்றும் சுகாதார அமைச்சு, முன்னாள் பணிப்பாளர், சுகாதார முறை அபிவிருத்தி மற்றும் சுகாதார தொழில்நுட்பம் (WHO) தென் கிழக்கு ஆசிய பிராந்தியம், Senior Takemi Fellow ஹாவட் பல்கழைக்கழகம், உறுப்பினர், சர்வதேச நோய் பரவுகை மற்றும் தடுத்தல் தொடர்பான வைத்திய வலையமைப்பின் பணிப்பாளர் சபை, வைத்திய கல்வி தென்கிழக்காசிய கழகம் மற்றும் WHO இற்கான தென்கிழக்காசிய பொது சுகாதார கல்வி வலையமைப்பு, இலங்கைக்கான எயிட்ஸ் நிறுவனத்தின் தலைவர்.

## பேராசிரியர் டபிள்யூ.டி. லக்ஷ்மன்



பொருளியலாளர்: கொழும்பு பல்கலைக்கழகம், தலைவர், சமூக விஞ்ஞானிகள் கழகம், (1986 – 1988, 1994), தலைவர். இலங்கை பொருளியலாளர் கழகம் (1990 – 1993), பீடாதிபதி, பட்டதாரி கற்கைகளுக்கான பீடம் (1992 – 1994), இலங்கை மன்றக் கல்லூரி (1995 – 1997). உபவேந்தர் (1994 – 1999), தலைவர், தேசிய தொழில் முகாமைத்துவ நிறுவனம், உப தலைவர், தேசிய அபிவிருத்தி சபை, சபை அங்கத்தவர், NARESA (1997 – 1998), வருகை தரு பேராசிரியர் ரியூகொகு (Ryukoku) பல்கலைக்கழகம், ஜப்பான் (1999 – 2001), பொருளியல் துறை சிரேஷ்ட பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்.

## திரு. எச்.எம். குணசேகர




முன்னாள் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம், நிதி, திட்டமிடல் அமைச்சு

# நிறுவனத்தின் விபரத் திரட்டு

- ஆணைக்குழுவின் முதன்மை ஸ்தானம் தலைவரால் வகிக்கப்படுகின்றது.
- பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராவார்.
- கொள்கைகள், திட்டங்கள், அறிக்கைகள் மற்றும் தே.வி.தொ.ஆணைக்குழுவின் ஏனைய ஆவணங்களைத் தயாரிக்கின்ற நிபுணத்துவம்மிக்க ஆய்வுக் குழுக்கள் மற்றும் ஆலோசனைச் சபைகளுக்கான வசதியேற்பாடுகளையும் முகாமை செய்தலையும் விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்கள் மேற்கொள்கின்றனர்.
- நிறைவேற்றுச் செயலாளர் ஆணைக்குழுவின் செயலாளராக இருப்பதோடு அலுவலக முகாமையாளராகவும் கடமையாற்றுகின்றார்.
- நிதி சம்பந்தமான சகல விடயங்களையும் கணக்காளர் முகாமை செய்கின்றார்.
- ஆணைக்குழுவால், தேவையின் அடிப்படையில் விசேட பணிகளை மேற்கொள்வதற்காக ஆலோசகர்கள் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர்கள் தற்காலிகமாக வேலைக்கு அமர்த்தப்படுகின்றனர்.

# நிர்வாக கட்டமைப்பு




திண்மக் கோடு (___ ) நிரந்தர நிலை
உடைந்த கோடு ( ...... ) தற்காலிக நிலை

# விஞ்ஞான தொழில்நுட்ப மீளாய்வு

## நாட்டின் விஞ்ஞான தொழில்நுட்ப நிலைமைகள் பற்றிய ஆண்டு மீளாய்வு

மேற்படி தேசிய மீளாய்வின் பொருட்டு விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து நாம் தரவுகளை/ தகவல்களை வேண்டியிருந்தோம் என்பதோடு அவற்றில் 25 நிறுவனங்கள் மாத்திரமே பிரதிபலிப்புக் காட்டியிருந்தன. தரவு சேகரிப்புகள் தொடர்பாக தே.வி.தொ.ஆணைக்குழுவுடன் செயலாற்றும் பொருட்டும், தரவு சேகரிப்புப் படிவத்தில் உள்ளடங்க வேண்டியவை மற்றும் மீளாய்வின் விடயப் பரப்பு தொடர்பாக விளக்கும் பொருட்டு 2012 சனவரி 23 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் பங்குகொள்வதற்காகவும் அந்த நிறுவனங்கள் தமது இணைப்பு உத்தியோகத்தரை பெயர் குறித்து நியமித்திருந்தன. கூட்டத்தில் நாம் கலந்துரையாடியதன் அடிப்படையில், வினாக்கொத்து திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. தரவு/தகவல்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியாக 2012 மார்ச் 15 ஆம் திகதி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பல்வேறான காரணங்களினால் அவை 2012 ஜுன் வரை கிடைத்துக்கொண்டிருந்தன. தரவு/தகவல்களில் காணப்பட்ட குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டதன் பின்னர் இடைக்கால வரைவு அறிக்கையொன்று தொகுக்கப்பட்டது. 2012 இன் இறுதியில் திருத்தப்பட்டவாறான இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது.

## விஞ்ஞான தொழில்நுட்ப நிறுவனங்கள் பற்றிய மீளாய்வு

விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தைப் பற்றி மீளாய்வு செய்து அரசாங்கத்திற்கு அறிக்கையிடுவதற்கு, 1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் அவிருத்திச் சட்டத்தின் மூலம் தே.வி.தொ.ஆணைக்குழுவுக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம் (ITI), நவீன தொழில்நுட்பங்களுக்கான ஆதர் சீ. கிளார்க் நிறுவனம் (ACCIMT), தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC) மற்றும் அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவனம் (IFS) ஆகியன 2012 ஆம் ஆண்டினுள் மீளாய்வு செய்வதற்கு அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனங்களாகும். மேற்படி நான்கு நிறுவனங்களில் ITI, IFS, மற்றும் NERDC ஆகிய நிறுவனங்களின் மீளாய்வானது, அவற்றின் சுய மதிப்பீட்டு அறிக்கைகள் சமர்ப்பிக்கத் தாமதமானதன் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது.

### ➢ வளிமண்டலவியல் திணைக்களத்தின் மீளாய்வு (DoM)

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செயலாளரது விசேட வேண்டுகோளின் அடிப்படையில் வளிமண்டலவியல் திணைக்களம் மீளாய்வு செய்யப்பட்டது. பூர்த்தி செய்யப்பட்ட சுய மதிப்பீட்டு அறிக்கை 2012 மார்ச் மாதத்தில் தே.வி.தொ.ஆணைக்குழுவுக்குக் கிடைத்தது. அதனைத் தொடர்ந்து வளிமண்டலவியல் திணைக்களத்தின் அனுமதியுடன் தே.வி.தொ.ஆணைக்குழுவினால் மீளாய்வுக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. மீளாய்வுக் குழு பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது.

பேராசிரியர் உபுல் சொன்னாதர (தலைவர்) - சிரேஷ்ட பேராசிரியர், பௌதீகவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன - சிரேஷ்ட பேராசிரியர், பௌதீகவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.

திரு. ஏ.என்.ஆர். அமரதுங்க - அமைச்சரின் செயலாளர் - சுகாதார அமைச்சு

கலாநிதி பி.வீ.ஆர். புண்ணியவர்தன - இயற்கை வள முகாமைத்துவ நிலையம், கமத்தொழில் திணைக்களம்

மீளாய்வுக் குழுவின் முதலாவது கூட்டம் 2012 மார்ச் 16 ஆம் திகதி நடைபெற்றது. மீளாய்வுக் குழு 2012 மே 10, 11 ஆம் திகதிகளில் வளிமண்டலவியல் திணைக்களத்திற்குச் சென்று மீளாய்வை மேற்கொண்டது. வளிமண்டலவியல் திணைக்களத்தின் சேவை வழங்குதலின் மீது வளிமண்டலவியல் திணைக்களத்தின் பங்குதாரர்களது கருத்துக்களையும் அவதானிப்புகளையும் பெறும் பொருட்டு, தே.வி.தொ.ஆணைக்குழு அவர்களுடனான சந்திப்பை 2012 மே 25 ஆம் திகதி ஒழுங்கு செய்திருந்தது.

மீளாய்வுக் குழு பல கூட்டங்களை நடத்தியதன் பின்னர் 1வது மீளாய்வு வரைவு அறிக்கை 2012 செப்தெம்பர் 11 ஆம் திகதி வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2012 ஒக்றோபர் 08 ஆம் திகதி வரைவு அறிக்கை மீதான தனது கருத்துரைகளை வளிமண்டலவியல் திணைக்களம் சமர்ப்பித்ததோடு, கருத்துரைகளுக்கிணங்க அறிக்கை சிறிதளவு திருத்தியமைக்கப்பட்டது. 2012 திசெம்பர் 19 ஆம் திகதி இறுதி மீளாய்வு அறிக்கை வளிமண்டலவியல் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

## ➢ நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ. கிளார்க் நிறுவனத்தின் (ACCIMT) மீளாய்வு

ACCIMTயின் சுய மதிப்பீட்டு அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர், ACCIMT யினதும் தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சினதும் அனுமதியுடன் NASTEC பின்வரும் மீளாய்வுக் குழுவை நியமித்தது.

கலாநிதி எஸ்.ஏ.கே. அபேவர்தன (தலைவர்) - முன்னாள் பணிப்பாளர், தேசிய விஞ்ஞான மன்றம்.

பேராசிரியர் எச்.எஸ்.பீ. பெரேரா - சிரேஷ்ட விரிவுரையாளர், இலங்கை தகவல், தொழில்நுட்பவியல் நிறுவனம்

கலாநிதி காமினீ விஜயரத்ன - சிரேஷ்ட விரிவுரையாளர், கைத்தொழில் முகாமைத்துவத் திணைக்களம், விஞ்ஞான பீடம், களனி பல்கலைக்கழகம்.

திரு. ஜீ.பி. விமலரத்ன - முன்னாள் பதில் பொதுமுகாமையாளர், தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

திரு. ஜீ. பிரசாத் ஜீரசிங்க - மனித வள முகாமைத்துவ வருகைதரு விரிவுரையாளர், ஆளணி முகாமைத்துவ நிறுவனம்.

மீளாய்வுக் குழுவின் முதலாவது கூட்டம் 2012 ஆகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்றதோடு, நிறுவனத்தை மீளாய்வு செய்யும் பொருட்டு 2012 செப்தெம்பர் 10, 11 ஆம் திகதிகளில் மீளாய்வுக் குழு ACCIMT க்கு சென்றது.

ACCIMT யின் பங்குதாரர்களது கருத்துரைகளைப் பெறுவதற்கான கூட்டமொன்று 2012 செப்தெம்பர் 19 ஆம் திகதி NASTEC இல் நடைபெற்றது. மீளாய்வுக் குழு பல கூட்டங்களை நடத்தியதன் பின்னர் முதலாவது மீளாய்வு வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு கருத்துரைகள் மற்றும் உண்மை நிலையின் உறுதிப்படுத்தலின் பொருட்டு 2012 ஒக்றோபர் 23 ஆம் திகதி ACCIMT க்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## ➢ IFS, ITI மற்றும் NERD நிலையத்தின் மீளாய்வு

IFS, ITI மற்றும் NERD நிலையத்தின் சுய மதிப்பீட்டு அறிக்கைகள் 2012 இன் இறுதிக் காலாண்டினுள் NASTECக்கு கிடைத்தன. ஆதலால் இந்நிறுவனங்களின் மீளாய்வு 2013 ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# சர்வதேச உறவுகள்

## NAM S&T நிலையத்தின் ஊடாக வழங்கப்பட்ட பயிற்சிகள்

அணிசேரா நாடுகளினதும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் விஞ்ஞான, தொழில்நுட்ப மத்திய நிலையம் (NAM S&T Centre) இந்தியா, அரசாங்கங்களுக்கு இடையிலானதொரு அமைப்பாகும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு ஏற்புடையதான விஞ்ஞான மற்றும் சமூக பொருளாதார பிரச்சினைகள் தொடர்பிலான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் இதன் செயற்பாடுகளில் ஒன்றாகும்.

2012 ஆம் ஆண்டில் NAM S&T Centre இன் ஊடாக இலங்கையின் ஐந்து உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் NASTEC இனால் வழங்கப்பட்டது. அவர்கள் வருமாறு:

1. திரு. ஜே.பீ.எல். ஜயசிங்க, கமத்தொழில் கண்காணிப்பு உத்தியோகத்தர், கமத்தொழில் திணைக்களம், கொழும்பு, - உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பிலான NAM S&T Centre /CFTRI இணைந்த பாடநெறிக்கு (2012 ஒக்றோபர் முதல் 2013 மார்ச் வரையிலான 6 மாதங்களுக்கு) தெரிவு செய்யப்பட்டார்.

2. செல்வி ஆஷா பிட்டதெனிய, விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், NASTEC, - 2012 மே 13-16 இல் ஈரானில் நடத்தப்பட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான இராஜதந்திர விஞ்ஞான, தொழில்நுட்ப சர்வதேச செயலமர்வில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தினார்.

3. செல்வி பானுகீ ஜயசூரிய, விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், - இரசாயன / ஔடத மற்றும் மருந்தாக்கல் இயற்கை உற்பத்திகள் தொடர்பிலான NAM S&T Centre-ICCBS இணைந்த பாடநெறிக்கு (ஆறு மாதங்களுக்கு) வாய்ப்பளிக்கப்பட்டது.

4. 2012 ஜுலை 16-20 வரை இந்தியாவில் புலமைச் சொத்துரிமைகளிலான சமகால முகாமைத்துவ மூலோபாயங்கள் தொடர்பிலான சர்வதேச உயர் பயிற்சிப் பாடநெறி நடத்தப்பட்டதோடு, கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் நிறுவன செயலாளர், செல்வி ரேணுகா ஜயதிலக்க பயிற்சிப் பாடநெறியில் பங்கேற்றார்.

5. திரு. அன்ரன் ஜயகொடி, புவிச்சரிதவியலாளர், புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகம், - 2012 செப்தெம்பர் 25-27 இல் தென் ஆபிரிக்காவில் நடைபெற்ற, கனிப்பொருள் பதனிடலும் அதன் நலன்களும் தொடர்பிலான சர்வதேச செயலமர்வில் பங்கேற்றார்.

6. கலாநிதி சந்துன் தல்பதாது, ஆராய்ச்சி விஞ்ஞானி, கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம், - 2012 திசெம்பர் 2-6 இல் எகிப்து, கைரோவில் நடைபெற்ற கைத்தொழில் உயிர்தொழில்நுட்பவியல் தொடர்பிலான சர்வதேச செயலமர்வில் பங்கேற்றார்.

## இளம் விஞ்ஞானிகள் அரங்கம் (YSF)

### ➢YSF கருத்தரங்கு மற்றும் ஆண்டுப் பொதுக் கூட்டம் 2011

இளம் விஞ்ஞானிகள் அரங்கம், முதற் தடவையாக அவர்களது ஆராய்ச்சிப் பணிகளை விஞ்ஞான சமூகத்திற்கு சமர்ப்பிக்கும் பொருட்டு அதன் அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கொன்றை ஒழுங்கு செய்தது. கருத்தரங்கானது YSF இன் ஆண்டுப் பொதுக் கூட்டத்துடன் இணைந்து 2012 சனவரி 27 ஆம் திகதி கொழும்பு, ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (HARTI) நடத்தப்பட்டது.

பொழிப்புகளைச் சமர்ப்பிக்குமாறு நாம் விடுத்திருந்த கோரிக்கைக்குப் பிரதிபலிப்பாக YSF உறுப்பினர்களிடமிருந்து 76 பொழிப்புகள் எமக்குக் கிடைத்திருந்தன. ஒவ்வொரு பொழிப்பும் இரண்டு சிரேஷ்ட விஞ்ஞானிகளால் ஒரே மாதிரியிலான அளவுகோல்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டது. கருத்தரங்கானது இரண்டு இணை அமர்வுகளில் நடத்தப்பட்டதோடு, அதில் 28 உரை நிகழ்த்துதல்கள் நடைபெற்றன. சுவரொட்டிகளை சமர்ப்பித்தலும் நடைபெற்றதோடு அதில் 20 சுவரொட்டிகள் இடம்பெற்றன. தெரிவு செய்யப்பட்ட அனைத்து சமர்ப்பிப்புகளும் YSF கருத்தரங்கின் செயற்பாடுகளின்போது வெளியிடப்பட்டன.

ஒவ்வொரு அமர்விலும் அழைக்கப்பட்டிருந்த சிரேஷ்ட விஞ்ஞானிகள் நீதிபதிகளாக சேவையாற்றினார்கள் என்பதோடு, ஒவ்வொரு உரை நிகழ்த்தும் அமர்விலிருந்தும் மிகச் சிறந்த மூன்று சமர்ப்பிப்பாளர்களுக்கும், மிகச் சிறந்த ஐந்து சுவரொட்டிகளுக்கும் திறமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான புதிய ஊக்குவிப்புக் குழு தெரிவு செய்யப்பட்டது.

திரு. சிந்தன மனோரத்ன (தலைவர்) - ஆராய்ச்சி உத்தியோகத்தர் - கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம், செல்வி யுவசரா திசாநாயக்க - விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக் கழகம், திரு. கெமிந்த ஹேரத் - விரிவுரையாளர் - வயம்ப பல்கலைக்கழகம், திரு. எம்.சீ.எம். சகீல் - விரிவுரையாளர் - ரஜரட்ட இலங்கைப் பல்கலைக்கழகம், திரு. சுதர்ஷன் சோமசிறி - சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி - கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம், செல்வி கிரிஸ்டின் தசநாயக்க - விஞ்ஞான உத்தியோகத்தர் - தேசிய விஞ்ஞான மன்றம், கலாநிதி புத்திகா அருக்கொட - சிரேஷ்ட விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், செல்வி மேனுகா உடுகம - விரிவுரையாளர் - வயம்ப பல்கலைக்கழகம், கலாநிதி நிலுக்ஷி லியனகுணவர்தன - விலங்கியல் ஆராய்ச்சி உத்தியோகத்தர் - விலங்கியல் ஆராய்ச்சி நிறுவனம், திரு. சிதத் பண்டார - ஆராய்ச்சி உத்தியோகத்தர் - ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனம், செல்வி கீதானீ சமரசிங்க - ஆராய்ச்சி உத்தியோகத்தர் - ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி நிறுவனம், செல்வி சீ.என். நூபேஆரச்சி - வருகைதரு விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.



*ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பங்குபற்றியோர்*



*கருத்தரங்கின் அங்குரார்ப்பணம்*



*YSF கருத்தரங்கில் இணை அமர்வொன்றில் பங்குபற்றியோர்*

## உரை நிகழ்த்தும் அமர்வில் வெற்றிபெற்றோர்

- **திரு. ஏ.எம்.எச்.எச். அபேகோன், மொரட்டுவை பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: ஏ.யு. திசாநாயக்க, சீ.ஆர். டி சில்வா, எல்.ஜீ.ரீ. கௌஷல்ய, எஸ்.எஸ். வீரவர்தன, எம்.ஏ.எப். நஜ்லா
- **கலாநிதி எச்.டீ.டீ. பந்துபிரிய, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்**
  இணை ஆசிரியர்கள்: ஜே.எம். துன்வெல்ல
- **கலாநிதி சஜானி டயஸ், கொழும்பு பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: பீ.எச். பிரேமரத்ன, பீ.வீ. உடகம
- **திரு. ஏ.ஐ. குணரத்ன, மொரட்டுவை பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: ஏ.ஜீ.பீ. அம்பேகொட, என்.ஐ. கட்டுகம்பல, எச்.ஏ.டீ.டபிள்யு. பண்டார, எஸ்.ஜே. சூரியஆரச்சி
- **திரு. எஸ்.எம்.எம். இக்ராம், வயம்ப இலங்கைப் பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: யு.கே. ஜயசிங்க-முதலிகே, ஜே.சீ. எதிரிசிங்க
- **செல்வி என்.ரீ. ஜயவிக்ரம, களனி பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: வீ.பீ.ஏ. வீரசிங்க
- **கலாநிதி என். லியனகுணவர்தன, விலங்கு ஆராய்ச்சி நிறுவனம்**
  இணை ஆசிரியர்கள்: ஜீ.ஆர். ராஜபக்ஷ, எல்.எம்.பீ. விஜேமான்ன, டபிள்யு.எம்.பீ. பண்டார, ஜீ. விஜேவர்தன, பீ.எஸ். பர்னாந்து, எம்.ஏ.ஆர். பிரியந்த, ஜீ.ஏ. குணவர்தன
- **திரு. எம்.கே. மீகஹகும்புற, தெங்கு ஆராய்ச்சி நிறுவனம்**
  இணை ஆசிரியர்கள்: எல்.பெரேரா, எச்.ஆர்.ரீ.விஜேசேகர, டபிள்யு.பி.எஸ்.பர்னாந்து, என்.ஜீ.ஏ.களனி, எம்.ஜே.டிக்ஸன்
- **செல்வி சீ.என். நூபேஆரச்சி, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: சீ.ஏ. தொட்டவத்தகே, ஜீ.கே.ஆர். சேனாதீர, வீ.பீ.எஸ். பெரேரா
- **கலாநிதி ஏ.எஸ். பெரேரா, மொரட்டுவை பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: கே.எம்.சீ. ஜயரத்ன, டீ.சீ. பர்னாந்து, ஐ.எல். ஹத்தொட்டுவ, டீ.ஏ.சீ. மதுரங்கி
- **திரு. கே. பிரசாந்னாத், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: எஸ் கருணாகரன், எஸ். மஹேந்திரன்
- **செல்வி ஜே.எம்.எம். உடுகம, இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: யு.கே. ஜயசிங்க முதலிகே

## சுவரொட்டிகள் சமர்ப்பிக்கும் அமர்வில் வெற்றிபெற்றோர்

- **திரு. ரீ. கிஷாந்தன், மொரட்டுவை பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: எஸ்.பெரேரா, கே.டீ.ஏ.கே.எஸ்.பெரேரா, எச்.ஏ.எஸ்.பெரேரா, டீ.ரீ.எச்.வீ.மடொல, எம்.வல்பொல
- **செல்வி கே.வீ.வீ.எஸ். குடலிகம, இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம்**
  இணை ஆசிரியர்கள்: வீ.எச்.எல். ரொட்ரிகோ, கே.எம்.ஈ.பீ. பர்னாந்து, பீ.ஏ.ஜே. யாப்பா
- **கலாநிதி ஏ.எஸ். பெரேரா, மொரட்டுவை பல்கலைக்கழகம்**
  இணை ஆசிரியர்கள்: ஏ.எச்.கே. லக்பிரியா, எம்.பீ.ஏ.பீ. சில்வா, ஏ.பீ.ஏ.ஈ. சுதர்கா, ஏ.எஸ்.ரீ. சோமசிறி
- **திரு. ஏ.கே. விக்கிரமசூரிய, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்**
- **கலாநிதி சீ. விஜயசிறிவர்தன, கைத்தொழில் தொழில்நுட்பவியல் நிறுவனம்**
  இணை ஆசிரியர்கள்: டபிள்யு.பீ.கே.எம். அபேசேகர, ஜீ.ஏ.எஸ். பிரேமகுமார





*மிகச் சிறந்த சமர்ப்பிப்பாளர்களுக்கு திறமைச் சான்றிதழ்கள் வழங்கல்*

## ➢YSF விருது 2011

தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக்குழு இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் பொருட்டும் அவர்களது அடைவுகளுக்கு அங்கீகாரம் வழங்கும் பொருட்டும் 2006 ஆம் ஆண்டில் YSF விருது வழங்கலை ஆரம்பித்து வைத்தது. YSF ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

விருதுகள் இரண்டு வகைகளின் கீழ் வழங்கப்படுகின்றன: அவை, விஞ்ஞான ஆராய்ச்சிகள் மற்றும் விஞ்ஞானத்தைப் பிரபல்யப்படுத்தலும் மேம்படுத்தலும் ஆகும் மேற்படி துறைகளில் திறமையை வெளிக்காட்டுகின்ற YSF அங்கத்தவர்களுக்கு இவ்விருதுகள் வழங்கப்படும். ஒவ்வொரு விருதும் பணப் பரிசிலையும் சான்றிதழையும் உள்ளடக்கியதாயுள்ளது.

விருது பெறுனர்களைத் தெரிவு செய்வதற்காக NASTEC மதிப்பீட்டுக் குழுவொன்றை நியமித்ததோடு, குழு பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்தது.

- பேராசிரியர் சாகரிகா ஏக்கநாயக்க - தலைவர், உயிர் இரசாயனவியல் திணைக்களம், மருத்துவ விஞ்ஞான பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
- கலாநிதி எவெராட் ஜயமான்ன - பிரதி பணிப்பாளர் (ஆராய்ச்சி), தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், லுனுவில.
- பேராசிரியர் ருச்சிர குமாரணதுங்க - சிரேஷ்ட பேராசிரியர், கடற்றொழில், சமுத்திர விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடம், ருகுணு பல்கலைக்கழகம்,

விஞ்ஞானத்தைப் பிரபல்யப்படுத்தலும் மேம்படுத்தலும் தொடர்பில் விருதுக்கான திறமையை வெளிக்காட்டிய தகுதியான போட்டியாளர்கள் ஒருவரும் இருக்கவில்லை என்பது கண்டறியப்பட்டது. எவ்வாறாயினும், விஞ்ஞான ஆராய்ச்சி வகையின் கீழ் இரண்டு போட்டியாளர்கள் சமமான விதத்தில் திறமையை வெளிக்காட்டியமையால் இரண்டு விருதுகள் வழங்கப்பட்டன. பின்வரும் விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

### விஞ்ஞான ஆராய்ச்சியில் திறமைசாலிகளுக்கான விருதுகள்



*பேராசிரியர் உதித் ஜயசிங்க*
*கமத்தொழில் முகாமைத்துவத் திணைக்களம்*
*கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவ பீடம்*
*இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்*



*கலாநிதி ரூபிகா ராஜகருணா*
*விலங்கியல் திணைக்களம்*
*விஞ்ஞான பீடம்*
*பேராதனை பல்கலைக்கழகம்*

## ➢"உயிர்தொழில்நுட்பவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் கோட்பாடுகள்" தொடர்பிலான ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

"உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் கோட்பாடுகள்" தொடர்பிலான ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழு YSF மற்றும் அனுராதபுரம், மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துடன் கூட்டிணைந்து ஒழுங்குசெய்தது. இது அனுராதபுரத்தில் மார்ச் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமானது உயிர் தொழில்நுட்பவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல் துறையில் உயர் தர விஞ்ஞான ஆசிரியர்களது அறிவை இற்றைப்படுத்தும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்பட்டது. நிகழ்ச்சித்திட்டமானது டீ.என்.ஏ. பண்புகள், தாவர இழைய வளர்ப்பு, என்சைம், மரபணு குளோனின், மரபணு ரீதியில் மாற்றப்பட்ட உயிரினங்கள் (GMO) மற்றும் கமத்தொழிலின் அவற்றின் பயன்பாடுகள், GOM தொடர்பான மருந்துகள், கைத்தொழில் அதேபோன்று சமூகப் பிரச்சினைகள ஆகிய விடயப் பரப்புகளை உள்ளடக்கியுள்ளது.

வடமத்திய மாகாணத்திலிருந்து அண்ணளவாக 70 உயர் தர விஞ்ஞான ஆசிரியர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்றனர். நிகழ்ச்சித்திட்டத்தின் இறுதியில் பங்குபற்றியவர்களுக்கு மத்தியில் மதிப்பீட்டுப் பத்திரமொன்று விநியோகிக்கப்பட்டதோடு, அவர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பயனுறுதன்மையை மிக உயர்வாக மதிப்பிட்டிருந்தனர்.

பின்வரும் வளவாளர்கள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்தினர்.

- **தாவர இழைய வளர்ப்பு**
  பேராசிரியர் பீ.ஏ. வீரசிங்க
  பீடாதிபதி
  விவசாய பீடம்
  இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

- **டீ.என்.ஏ.யுடன் செயற்படுகின்ற என்சைம்கள், அகரோஸ் ஜெல் மின்னியல் கடத்தல், டீ.என்.ஏ. பரிசோதனை, டீ.என்.ஏ. தொழில்நுட்பம் மற்றும் மரபணு குளோனின் மீளிணைப்பு, மரபணு ரீதியில் மாற்றப்பட்ட உயிரினங்கள்**
  திரு. எம்.சீ.எம். ஸகீல்
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  விவசாய பீடம்
  இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

- **டீ.என்.ஏ. பண்புகள், டீ.என்.ஏ. பிரித்தெடுத்தல், டீ.என்.ஏ. பரிசீலனை மற்றும் கலப்பினமாக்கல், பக்றீரியா பிளாஸ்மிட்ஸ், ஆர்டீ.என்.ஏ. தொழில்நுட்பத்தில் பயன்படுத்தப்படுகின்ற வைரஸ் மரபணு மற்றும் கடத்தி**
  கலாநிதி ரீ.சீ. பமுனுஆரச்சிகே
  தலைவர், உயிரியல் திணைக்களம்
  பிரயோக விஞ்ஞான பீடம்
  இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்





*அனுராதபுரத்தில் நடைபெற்ற ஆசிரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியவர்கள்*

## ➢ “கண்டுபிடிப்புகளும் புத்தாக்கங்களும்” தொடர்பிலான செயலமர்வு

YSF உடன் ஒன்றிணைந்து NASTEC ஒழுங்கு செய்த “கண்டுபிடிப்புகளும் புத்தாக்கங்களும்” தொடர்பிலான செயலமர்வு 2012 ஜுன் மாதம் 26 ஆம் திகதி ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மஹிந்த சில்வா கேட்போர் கூடத்தில் (HARTI) நடைபெற்றது. தேசிய புத்தாக்குனர்கள் ஆணைக்குழுவின் தலைவர், திரு. தீபால் சூரியஆரச்சி செயலமர்வை நடத்தினார்.

புத்தாக்க நடவடிக்கைகளுக்கான நுண்ணறிவை வழங்குதலும், தான் நிபுணத்துவம் வகிக்கின்ற துறையில் புத்தாக்குனர்களாக ஆவதற்கு இளம் விஞ்ஞானிகளை ஊக்கவித்தலுமே செயலமர்வின் குறிக்கோளாகும்.

வளவாளரான திரு. சூரியஆரச்சி, சமூகத்திலுள்ள பிரச்சினைகளை எவ்வாறு இனங்காணலாம் என்பதைப் பற்றியும் இப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக சாதாரணமான ஆக்கங்களை உதாரணமாகக் காட்டி ஆக்கபூர்வமான தீர்வுகளைக் கண்டறியுமாறும் விளக்கமளித்தார்.

இச் செயலமர்வில் 80 க்கும் அதிகமான பங்குபற்றுனர்கள் பங்கேற்றார்கள். பல்கலைக்கழக கல்விமான்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்களும் விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள நிர்வாக உத்தியோகத்தர்களும் பங்குபற்றுனர்களாக காணப்பட்டனர்.

## ➢ “ஆராச்சிகளில் ஒழுக்கவியல்” பற்றிய செயலமர்வு

இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுக்கான சங்கத்தின் (SLAAS) பிரிவு A (மருத்துவ, பல் மருத்துவ மற்றும் விலங்கியல் விஞ்ஞானம்) உடன் ஒன்றிணைந்து “ஆராய்ச்சிகள் தொடர்பிலான ஒழுக்கவியல்” பற்றி விஞ்ஞானிகளுக்கான விழிப்புணர்வூட்டல் செயலமர்வொன்றை 2012 ஏப்பிரல் 20 ஆம் திகதி கொழும்பு 7, விஜேராம மாவத்தை, SLAAS கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்திருந்தது.

விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஒழுக்கவியலின் முக்கியத்துவத்தைப் பற்றி அறிவூட்டல் இச் செயலமர்வின் குறிக்கோளாகும்.

விலங்குகள் மற்றும் மனிதர்கள் தொடர்பிலான ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒழுக்கவியல், ஒழுக்கவியல் மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளில் ஒழுக்கவியல் மீது கவனம் செலுத்துவதிலுள்ள விஞ்ஞான ரீதியிலான செல்லுபடியானதன்மை ஆகிய விடயப் பரப்புகளை இச் செயலமர்வு உள்ளடக்கியிருந்தது.

பின்வரும் வளவாளர்கள் செயலமர்வை நடத்தினார்கள்.

- **“ஆராய்ச்சிகளில் ஒழுக்கவியல்” மற்றும் “ஒழுக்கவியல் மீளாய்வு நடவடிக்கைகள்” பற்றிய அறிமுகம்**
  கலாநிதி சாந்தனீ வனிகதுங்க (தலைவர், ஒழுக்கவியல் மீளாய்வுக் குழு/ ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  மருந்தாக்கவியல் திணைக்களம்
  மருத்துவ விஞ்ஞான பீடம்,
  ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,

- **“விலங்கு ஆராய்ச்சியில் ஒழுக்கவியல் பிரச்சினைகள்”**
  கலாநிதி மயுரி தம்மிட்டியாகொட
  விலங்கியல் அறுவைச்சிகிச்சை மருத்துவர்
  மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்

- **“விஞ்ஞான ரீதியிலான செல்லுபடியான தன்மையும் ஆராய்ச்சி ஒழுக்கவியலும்”**
  கலாநிதி வத்சலா ஜயசூரிய (செயலாளர், ஒழுக்கவியல் மீளாய்வுக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  சமுதாய மருத்துவத் திணைக்களம்
  மருத்துவ விஞ்ஞான பீடம்
  ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

- **“பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய சனத்தொகை பற்றிய ஆராய்ச்சியும் இசைவு அறிவிப்பும்”**
  கலாநிதி ரசிகா பெரேரா (உறுப்பினர், ஒழுக்கவியல் மீளாய்வுக் குழு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்)
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  உயிர் இரசாயனவியல் திணைக்களம்
  மருத்துவ விஞ்ஞான பீடம்
  ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

## ➢ "உங்கள் வேலைத்தளத்தில் சிறந்த செயலாற்றுகைக்கான மனஅழுத்த முகாமைத்துவம்"

இச் செயலமர்வு 2012 ஒக்றோபர் 19 ஆம் திகதி இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுக்கான சங்கத்தின் (SLAAS) கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதனை தேசிய விஞ்ஞான தொழில்நுட்ப ஆணைக் குழுவின் (NASTEC) இளம் விஞ்ஞானிகள் அரங்கம் (YSF) மற்றும் இலங்கை விஞ்ஞான மேம்பாட்டுக்கான சங்கத்தின் (SLAAS) பிரிவு A ஒன்றிணைந்து ஒழுங்குசெய்திருந்து.

மன அழுத்தத்துக்கான காரணங்கள் மற்றும் மன அழுத்தத்திலிருந்து மீள்வதற்கான எளிமையான நுட்பங்களை அறிமுகப்படுத்தல் தொடர்பில் அறிவூட்டுதலே இச் செயலமர்வின் குறிக்கோளாகும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் கரும்பு ஆராய்ச்சி நிறுவனம், கைத்தொழில், தொழில்நுட்பவியல் நிறுவனம், தேசிய விஞ்ஞான மன்றம், ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் ஆகிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களிலிருந்து அண்ணளவாக 60 பங்குபற்றுனர்கள் இச் செயலமர்வில் பங்கேற்றனர்.

இச் செயலமர்வில் பின்வரும் சமர்ப்பணங்கள் மேற்கொள்ளப்பட்டன.

- **நலமாயிருத்தல்: ஒரு பெறுபேறா அல்லது வளமா?**
  கலாநிதி மஹேஷ் ராஜசூரிய
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  மருத்துவ பீடம்
  கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும்
  உளவியல் மருத்துவ மதியுரையாளர்
  இலங்கை தேசிய ஆஸ்பத்திரி

- **கவனத்தின் அடிப்படையிலான மனஅழுத்தக் குறைப்பு**
  கலாநிதி பியஞ்சலி த சொய்ஸா
  சிரேஷ்ட விரிவுலையாளர்
  மருத்துவ பீடம்
  கொழும்பு பல்கலைக்கழகம்

- **பூங்காக் கலையின் ஊடாக மனஅழுத்தத்தை தணித்தல்**
  கலாநிதி கபில யாகந்தவல
  சிரேஷ்ட விரிவுரையாளர்
  விவசாய பீடம் மற்றும் பெருந்தோட்ட முகாமைத்துவம்
  பூங்காக் கலை மற்றும் நிலத் தோற்ற தோட்டக் கலை திணைக்களம்
  இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

# *எமது அலுவலகர்கள்*

## ♦ நிறைவேற்று அலுவலகர்கள்

**பதில் பணிப்பாளர்**

கலாநிதி முதித லியனகெதர
*விஞ்ஞான இளமாணி, தத்துவவியல் முதுமாணி (பேராதனை)*
*கலாநிதி (சியொல்)*

**விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர்கள்**

கலாநிதி முதித லியனகெதர
*விஞ்ஞான இளமாணி, தத்துவவியல் முதுமாணி (பேராதனை)*
*கலாநிதி (சியொல்)*

செல்வி ஆஷா பிட்டதெனிய
*விஞ்ஞான இளமாணி, விஞ்ஞான முதுமாணி (பேராதனை)*

**கணக்காளர்**

திருமதி. ஜீ. சி. கே. பீரிஸ்
*வர்த்தக இளமாணி (ஸ்ரீ ஜயவர்தனபுர)*

**நிறைவேற்றுச் செயலாளர்**

திரு. ருக்மன் குரே புலத்சிங்ஹல

## ♦ உதவி அலுவலகர்கள்

**நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள்**

**கணினிப் பிரயோகங்கள்**
திருமதி. எல். ஏ. எல். என். லியனாரச்சி (ஜூலை வரை)
***விஞ்ஞான இளமாணி, (சப்பிரகமுவ)***

**நிதி**
திரு. ஆர். எம் துசித்த ரத்நாயக்க
*M.A.A.T.*

**ஆராய்ச்சி உதவியாளர்கள்**

செல்வி தனஞ்ஜலி பெரேரா (மார்ச் வரை)
***விஞ்ஞான இளமாணி,(பேராதனை)***

செல்வி அமலி ஜயதிலக்க
***விஞ்ஞான இளமாணி, (சப்பிரகமுவ)***

**பிரத்தியேக உதவியாளர்கள்**

திருமதி நில்மினி பெரேரா
செல்வி சயுமி விஜேசிங்க
செல்வி நிஷாந்தி மஹரகே

**வரவேற்பாளர்/தொலைபேசி இயக்குனர்**

செல்வி தக்ஷினி கருணாதிலக்க

**சாரதிகள்**

திரு. எச்.ஏ. அனில் குமார ஹெட்டியாரச்சி
திரு ஜ. ஜீ. ஜயசாந்த பிரபாத்
திரு. எரந்த பிரதீப்

**அலுவலக உதவியாளர்கள்**

திரு. ஏ. டீ. தனபால
திரு. நிசாந்த பியதாஸ

# அலுவலர்களின் செய்திகள்

சனவரியில், புதிய முகாமைத்துவ உதவியாளர் செல்வி நிஷாந்தி மஹறகேயை NASTEC வரவேற்றது.

மார்ச்சில், ஆராய்ச்சி உதவியாளர் செல்வி தனஞ்சலீ பெரேரா தனது ஒப்பந்த காலத்தை பூர்த்தி செய்துவிட்டு பட்டப்பின் படிப்புக் கல்விக்காக NASTEC ஐ விட்டுப் பிரிந்து சென்றார். அவர் NASTEC இல் இருந்த குறுகிய காலத்தினுள் அர்ப்பணிப்புடனும், பொறுப்புடனும் ஆற்றிய பெரும் சேவைக்காக நாம் அவருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

ஆகஸ்டில், கணனிப் பிரயோகப் பிரிவின் நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் திருமதி நிலூகா லியனஆரச்சிக்கு NASTEC பிரியாவிடை அளித்தது. அவர் NASTEC இல் இருந்த காலத்தினுள் அர்ப்பணிப்புடனும் பொறுப்புடனும் ஆற்றிய சேவைக்காக நாம் உண்மையிலேயே அவரைப் பாராட்டுகிறோம். அவரது எதிர்கால முயற்சிகளுக்கு நாம் நல் வாழ்த்துத் தெரிவிக்கிறோம்.

“குறுகிய கால ஒப்படையின்” கீழ் எம்முடன் சேவையாற்றிய இலங்கை ரஜரட்ட பல்கலைக் கழகத்தின் பட்டப் படிப்பு மாணவன் திரு. சம்பத் பிரியங்கரவுக்கு NASTEC நன்றி தெரிவிக்கின்றது. அவர் NASTEC வெப்தளத்தை மீள வடிவமைத்தார். அவரது பட்டப் படிப்பை வெற்றிகரமாக பூர்த்தி செய்துகொள்வதற்கு நாம் அவருக்கு நல்வாழ்த்துத் தெரிவிக்கிறோம்.

## அலுவலர்கள் பங்கேற்ற நிகழ்ச்சிகள்

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் (JICA) ஒழுங்கு செய்யப்பட்டு 2012 பெப்ரவரி 24 ஆம் திகதி கலதாரியில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் பங்குபற்றினார்.

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2012 மார்ச் 20 ஆம் திகதி நடத்தப்பட்ட அபிவிருத்திப் பெறுபேறுகளுக்கான முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வில் பங்குபற்றினார்.

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், மற்றும் செல்வி ஆஷா பிட்டதெனிய, விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், SLASS இனால் ஒழுங்குசெய்யப்பட்டு 2012 மார்ச் 30 ஆம் திகதி நடத்தப்பட்ட ஆராய்ச்சி வர்த்தகமயப்படுத்தல் தொடர்பிலான செயலமர்வில் பங்குபற்றினார்கள்.

- செல்வி ஆஷா பிட்டதெனிய, விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், புத்தாக்கங்களுக்கான நிலையம் மற்றும் ஈரான் தலைமைத்துவ தொழில்நுட்ப ஒத்துழைப்பு (CITC) தெஹ்ரான், ஈரான் மற்றும் அணிசேரா நாடுகளினதும் ஏனைய அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளினதும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிலையம், புதுடெல்லி, இந்தியா ஆகியவற்றால் ஒழுங்குசெய்யப்பட்டு 2012 மே மாதம் 13-15 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மூலோபாயம் தொடர்பான செயலமர்வில் பங்குபற்றினார்.

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், மற்றும் செல்வி குமாரி பீரிஸ், கணக்காளர், ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு 2012 மே மாதம் 31 ஆம் திகதி நடத்தப்பட்ட வேலைத்தளங்களுக்கு வருகைதராமையைக் கையாள்தல் தொடர்பான செயமர்வில் பங்குபற்றினார்கள்.

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், இந்தோனேசியாவில் 2012 ஜூலை 10-12 ஆம் திகதிகளில் நடைபெற்ற ஆசிய மாநாட்டின் 12வது விஞ்ஞானப் பேரவை மற்றும் “பசுமைப் பொருளாதாரத்தை முன்னிட்டான விஞ்ஞான அணிதிரட்டல்” தொடர்பான சர்வதேச கருத்தரங்கில் பங்குபற்றினார்.

- செல்வி குமாரி பீரிஸ், கணக்காளர், வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் 2012 ஜூலை 19 ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட விளைவுத்தாக்கம்மிக்க உள்ளகக் கணக்காய்வு தொடர்பான கருத்தரங்கில் பங்குபற்றினார்.

- செல்வி ஆஷா பிட்டதெனிய, விஞ்ஞான நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர், மற்றும் திருமதி நிலூகா லியனஆரச்சி, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், கணனி பிரயோகம், தொழில் கற்கைகளுக்கான தேசிய நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு 2012 ஆகஸ்ட் 07 ஆம் திகதி நடத்தப்பட்ட நிகழ்ச்சி முகாமைத்துவம் தொடர்பான செயலமர்வில் பங்குபற்றினார்.

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், விஞ்ஞான தொழில்நுட்ப உபாயங்களுக்கான சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் ஒழுங்குசெய்யப்பட்டு, 2012 செப்தெம்பர் 10 முதல் 27 வரை சீனாவில் நடத்தப்பட்ட விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கக் கொள்கைகள் மீதான சர்வதேச பயிற்சிப் பாடநெறி - 2012 இல் பங்குபற்றினார்.

- திரு. குரே புலத்சிங்கள, நிறைவேற்றுச் செயலாளர், தேசிய டெங்கு ஒழிப்பு அலகினால் 2012 ஒக்டோபர் 22 ஆம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த டெங்கு ஒழிப்பு தொடர்பிலான செயலமர்வில் பங்குபற்றினார்.

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் 2012 ஒக்டோபர் 23 ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட அனர்த்த முகாமைத்துவம் தொடர்பிலான செயலமர்வில் பங்குபற்றினார்.

- கலாநிதி முதித்த லியனகெதர, பதில் பணிப்பாளர், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சினால் 2012 ஒக்டோபர் 24 ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட தீர்மானம் எடுத்தல் தொடர்பிலான கருத்தரங்கில் பங்குபற்றினார்.

- செல்வி நிஷாந்தி மஹரகே மற்றும் செல்வி சயுமி விஜேசிங்க, முகாமைத்துவ உதவியாளர்கள், வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் 2012 ஒக்டோபர் 31 ஆம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட முகாமைத்துவ உதவியாளர்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பிலான செயலமர்வில் பங்குபற்றினார்கள்.

- செல்வி குமாரி பீரிஸ், கணக்காளர், மற்றும் திரு. துஷித ரத்நாயக்க, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், நிதி, வரையறுக்கப்பட்ட திறன் அபிவிருத்தி நிதியத்தினால் 2012 திசெம்பர் 04 மற்றும் 05 ஆம் திகதிகளில் ஒழுங்குசெய்யப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்குகின்றவாறான நிதியியல் அறிக்கையிடல் தொடர்பிலான செயலமர்வில் பங்குபற்றினார்கள்.

# நன்றியுரை

## ஆலோசகர்கள்

☞ **இளம் விஞ்ஞானிகள் அரங்கின் ஊக்குவிப்புக் குழு**

i) **திரு. சிந்தன் மனோரத்ன**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்
(தலைவர்)
கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

ii) **திரு. கெமிந்த ஹேரத்**
விரிவுரையாளர்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

iii) **திரு. எம்.சீ.எம். ஷகீல்**
விரிவுரையாளர்
இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்

iv) **திரு. சுதர்ஷன் சோமசிறி**
சிரேஷ்ட ஆராய்ச்சி விஞ்ஞானி
கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்

**செல்வி கிறிடைன் தசநாயக்க**
விஞ்ஞான உத்தியோகத்தர் தேசிய விஞ்ஞான மன்றம்

v) **கலாநிதி புத்திக அருக்கொட**
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

vii) **செல்வி கீதானி சமரசிங்க**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்
ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம்

viii) **செல்வி மேனுகா உடுகம**
விரிவுரையாளர்
இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்

ix) **கலாநிதி நிலுக்ஷி லியனகுணவர்தன**
விலங்கியல் ஆராய்ச்சி உத்தியோகத்தர்
விலங்கியல் ஆராய்ச்சி நிறுவனம்

x) **திரு. சிதத் பண்டார**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்
ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவனம்

xi) **செல்வி சீ.என். நூபேஆரச்சி**
வருகைதரு விரிவுரையாளர்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

xii) **செல்வி யுவசரா திசாநாயக்க**
விரிவுரையாளர்
பேராதனை பல்கலைக்கழகம்

☞ **மீளாய்வுக் குழு உறுப்பினர்கள் - வளிமண்டலவியல் திணைக்களம்**

i) **பேராசிரியர் உபுல் சொன்னாதர**
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதீகவியல் திணைக்களம்
விஞ்ஞான பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

ii) **பேராசிரியர் ரீ.ஆர். ஆரியரத்ன**
சிரேஷ்ட விரிவுரையாளர்
பௌதீகவியல் திணைக்களம்
விஞ்ஞான பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

iii) **கலாநிதி புண்ணியவர்தன**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்
இயற்கை வள முகாமைத்துவ நிலையம்
கமத்தொழில் திணைக்களம்
பேராதனை

Iv) **திரு. ஏ.என்.ஆர். அமரதுங்க**
அமைச்சுச் செயலாளர்
சுகாதார அமைச்சு

☞ **மீளாய்வுக் குழு உறுப்பினர்கள் - நவீன தொழில்நுட்பவியலுக்கான ஆதர் சீ. கிளார்க் நிறுவனம்**

i) **பேராசிரியர் எச்.எஸ்.சீ. பெரேரா**
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கை தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனம்

ii) **திரு. ஜீ.பி. விமலரத்ன**
முன்னாள் பதில் பொதுமுகாமையாளர்
தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்

iii) **கலாநிதி எஸ்.ஏ.கே. அபேவர்தன**
முன்னாள் பணிப்பாளர்
தேசிய விஞ்ஞான மன்றம்

iv) **கலாநிதி காமினீ விஜயரத்ன**
சிரேஷ்ட விரிவுரையாளர்
கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம்
விஞ்ஞான பீடம்
களனி பல்கலைக்கழகம்

v) **திரு. ஜீ. பிரசாத் ஜீரசிங்க**
மனித வள முகாமைத்துவ வருகைதரு விரிவுரையாளர்
ஆளணி முகாமைத்துவ நிறுவனம்

**தேசிய விஞ்ஞான, மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு**

**விபரமான வருமானக் கூற்று**

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)

| | **31-Dec-2012** | **31-Dec-2011** |
|---|---|---|
| **தொழிற்பாட்டு வருமானம்** | | |
| மீண்டுவரும் அளிப்புகள் | 15,448,150 | 12,662,000 |
| மூலதன அளிப்புகள் - வி.& தொ. சேவைகள் | 709,000 | 876,600 |
| அரசாங்க அளிப்புகளின் கடன் தீர்ப்பனவு-தேய்மானம் | 5,361,418 | 1,380,957 |
| வருமானம் | 109,936 | 161,623 |
| | **21,628,504** | **15,081,180** |
| **தொழிற்பாட்டுச் செலவுகள்** | | |
| ஆளணியினா் வேதனங்கள் | 6,796,285 | 6,887,957 |
| பயணச் செலவுகள் | 435,151 | 218,576 |
| வழங்கல்கள் மற்றும் நுகர்வுப் பாவனைகள் | 274,623 | 251,271 |
| பராமரிப்பு | 833,478 | 574,130 |
| ஒப்பந்த சேவைகள் | 4,486,096 | 4,125,321 |
| இடமாற்றங்கள் | 2,614,688 | 1,380,927 |
| வி.& தொ. சேவைகள் | 810,013 | 1,080,676 |
| தேய்மானம் மற்றும் கடன் தீர்ப்பனவுச் செலவுகள் | 5,361,418 | 1,380,957 |
| மொத்த தொழிற்பாட்டுச் செலவுகள் | **21,611,752** | **15,899,815** |
| இவ்வாண்டிற்கான (நட்டம்)/இலாபம் | 16,752 | (818,635) |
| **நிதியியல் செலவினம்** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை விற்றுப் பெற்ற வருமானம் | (55,450) | 10,570 |
| மொத்த தொழிற்பாடல்லாத வருமானம் (செலவுகள்) | - | - |
| ஆண்டுக்கான முழுமொத்த (செலவு)/வருமானம் | (38,698) | (808,065) |

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு**

**நிதி நிலைமை பற்றிய கூற்று**

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாய்களில்)

| | 31-Dec-2012 | 31-Dec-2011 | 1-Jan-2011 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 13,528,330 | 12,050,084 | 4,267,020 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| பொருட்பட்டியல்/கையிருப்புகள் | 180,769 | 149,907 | 149,484 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுகைகள் | 14,000 | 12,000 | 12,000 |
| முற்பணக் கொடுப்பனவுகள் | 1,306,993 | 421,355 | 418,459 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 291,582 | 242,574 | 897,548 |
| அலுவலர் கடன்கள் | 570,700 | 619,829 | 471,423 |
| | 2,364,044 | 1,445,665 | 1,948,914 |
| **மொத்த சொத்துக்கள்** | **15,892,374** | **13,495,749** | **6,215,934** |
| **பங்குரிமைகளும் பொறுப்புகளும்** | | | |
| **பங்குரிமையாளர்களுக்கு உரித்தாகின்ற பங்குகள்** | | | |
| திரண்ட நிதியம் | 3,793,706 | 5,064,982 | 6,314,193 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்குகள் | 1,629,300 | 1,629,300 | 1,629,300 |
| தடுத்துவைக்கப்பட்ட வருவாய்கள் | (4,308,804) | (4,270,106) | (3,462,042) |
| **மொத்த பங்குரிமைகள்** | **1,114,201** | **2,424,176** | **4,481,451** |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறையல்லாப் பொறுப்புகள்** | | | |
| பிற்போடப்பட்ட வருமானம் | 12,323,562 | 9,503,753 | 439,500 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் | 1,567,679 | 1,399,562 | 1,131,155 |
| | 13,891,241 | 10,903,315 | 1,570,655 |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்துகைகள் | 886,932 | 168,258 | 163,828 |
| **மொத்தப் பொறுப்புகள்** | **14,778,173** | **11,071,573** | **1,734,483** |
| **மொத்த மூலதனம் மற்றும் பொறுப்புகள்** | **15,892,374** | **13,495,749** | **6,215,934** |

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No: எல்எஸ்/ஈ/என்ஏஎஸ் ரீஈசீ/எப்ஏ/2012

ඔබේ අංකය / உமது இல / Your No.

දිනය / திகதி / Date: 2013 ஆகஸ்ட் 30

தலைவர்,

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு

**தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் vii ஆவது பகுதியின் 40(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka
දුරකථනය / தொலைபேசி / Telephone: 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No: 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில்: oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (SLFRS & LKAS) தயாரிக்கப்பட்டிருந்ததாகக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் பணிக்கொடை மற்றும் ஊழியர் கடன் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நாட்குறிப்பு பதிவுகளுக்காக நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய கட்டிட வாடகை ரூபா 180,000 தொகை கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

3

(இ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ஆராய்ச்சிப் படி ரூபா 11,250 தொகையும், அதற்காகச் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 900 தொகையும் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தன.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தி | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றுநிருபத்தின் 6.5.3 ஆம் பந்தி | ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 தினங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இறுதியாக 2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை மாத்திரமே பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தது. |
| (இ) 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008(iv) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபத்தின் 2 ஆம் பந்தி | திணைக்களத் தலைவருக்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருளின் அளவு 140 லீற்றராக இருந்த போதிலும் அந்த எல்லையினை 405 லீற்றரினால் மிகைத்து ரூபா 48,810 தெகையான எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது. |

(ஈ) நிதிப்பிரமாணம்

| | |
|---|---|
| நி.பி 225 | 24 சந்தர்ப்பங்களின் போது ரூபா 6,053,290 கூட்டுத்தொகைக்காக உறுதிச்சீட்டுக்கள் தயாரிக்கப்படாது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| நி.பி 756 | 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஏப்ரல் 01 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.2.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

நிறுவனத்தினால் வருடாந்தம் அரசாங்கத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற "முன்னைய ஆண்டில் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட விஞ்ஞான தொழில்நுட்ப செயற்பாடுகளின் மீளாய்வு அறிக்கை" தயாரிப்பதற்காக அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக அந்த நிறுவனங்களுக்கு கட்டணம் செலுத்தாது குறித்த உத்தியோகத்தர்களுக்கு ரூபா 88,000 செலுத்தப்பட்டிருந்தது.

**3. நிதி மீளாய்வு**

**3.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்கான ரூபா 15,448,150 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக் கொண்டதன் பின்னர் ஆணைக்குழுவின் செயற்பாடுகளிலிருந்து ரூபா 38,698 தொகையான பற்றாக்குறை காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவுகள் தொடர்பாக ரூபா 12,662,000 தொகையான அரசாங்க மானியத்தினை கணக்கிலெடுத்துக்கொண்டதன் பின்னர் அவ்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 808,065 தொகை பற்றாக்குறையாகக் காணப்பட்டது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 769,367 தொகையான அதிகரிப்பினை ஏற்படுத்தியதற்காக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகின்ற போது

மீளாய்வாண்டில் கிடைத்த அரசாங்க மானியம் ரூபா 2,786,150 இனால் அதிகரித்தமை இதற்குத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிதிசார் முன்னேற்ற அறிக்கை மாத்திரம் மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்துடன் பௌதீக செயலாற்றல் அறிக்கை 2013 மார்ச் 30 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பதில் கடமை பதவியொன்று நீண்ட காலமாக நிரப்பப்படாது இருக்கின்ற சந்தர்ப்பத்தில் அப்பதவியை மேலும் வைத்திருக்க வேண்டிய தேவைப்பாடு பற்றி உரிய அமைச்சின் செயலாளரினால் விசாரணை செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாது 2010 ஆகஸ்ட் 01 ஆந் திகதி தொடக்கம் ஆணைக்குழுவின் பணிப்பாளராக பதில் கடமைப் பதவியில் 02 வருடங்களும் 04 மாதமுமான காலம் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் போது 05 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 382,795 தொகை செலவிடப்பட்டு 02 நிறுவனங்கள் மாத்திரமே மீளாய்வு செய்யப்பட்டிருந்தன. அந்த மீளாய்வு அறிக்கை தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்விற்காகச் செய்யப்பட்ட செலவினம் செயற்பாடற்றதாக இருந்தது.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டம்

சிரேஷ்ட விஞ்ஞானிகளின் ஒன்றியம் மற்றும் இளம் விஞ்ஞானிகளின் ஒன்றியம் என்பவற்றிற்காக 02 செயலமர்வுகளை நடாத்துவதற்கு நிறுவனம் ரூபா 53,800 தொகையினைச் செலவிட்டிருந்ததுடன் அதற்காக ஒன்றியத்தில் சேகரிக்கப்பட்ட அங்கத்துவப் பணம் ரூபா 38,592 ஆனமையால் ரூபா 15,208 தொகையான நட்டம் நிறுவனத்திற்கு ஏற்பட்டிருந்தது.

## 4.5 பதவியணியினர் நிருவாகம்

ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 18 உத்தியோகத்தர்களையும், உள்ளவாறான பதவியணியில் 14 உத்தியோகத்தர்களையும் கொண்டிருந்ததுடன் உள்ளவாறான பதவியணியில் 04 உத்தியோகத்தர்கள் அவர்களது சேவையில் மாத்திரம் ஈடுபடுகின்ற பதவியாகையால் மீளாய்வாண்டில் 05 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன.

# 5. கணக்காய்வும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று தனியாக ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஒரு கணக்காய்வு ஐயவினா மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஆணைக்குழுவின் பிரதான நோக்கமான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது ரூபா 5,052,000 தொகையான மிகை பாதீட்டு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த பாதீடு மீளவும் ரூபா 1,752,000 வரை 65 சதவீதத்தினால் குறைத்து திருத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் ஆண்டின் போது உள்ளவாறான செலவினம் ரூபா 810,013 ஆக இருந்துடன் நிதிசார் செயலாற்றல் 46 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம் பாதீட்டு மதிப்பீடு நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கபட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**தேசிய விஞ்ஞான, தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14 (2) (இ) வாசகத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்**

மேற்படி அறிக்கை தொடர்பிலான விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.2 நிதிக் கூற்றுக்கள் பற்றிய கருத்துத் தெரிவித்தல்**

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

(அ) i) 2012 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படுகின்றபோது ஊழியர் கடன்கள் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகள் தவிர்ந்த ஏனைய அனைத்துக் கணக்குப் பதிவுகளும் SLFRS மற்றும் LKAS ஆகிய புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டன.

ii) ஊழியர் கடன்கள் மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவுகளின் கணக்குப் பதிவுகளை மேற்படி நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ள முடியாதிருந்தமைக்கான காரணம், அதற்கான காலம் போதியதாக இருக்கவில்லை என்பதாகும். அடுத்த ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கின்றபோது மேற்படி இரண்டு விடயங்களும் புதிய கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குப் பதிவு செய்யப்படும் என்பதை குறிப்பின் மூலம் வெளிப்படுத்துதல் மாத்திரமே தவறவிடப்பட்டிருந்தது.

கவனிக்க:- இக் கணக்காய்வு விசாரணை 14(2) (சீ) வரைவானது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு பதில் அளிக்கின்றபோது ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைமை

2013 ஆம் ஆண்டின் கணக்குக் கூற்றுக்களை தயாரிக்கின்றபோது இது தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) எதிர்வரும் ஆண்டில் பேரேட்டுக் குறிப்புகள் தொடர்பில் பேரேட்டு கட்டணச் சிட்டைகளைத் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) இது கணக்குகளை தயாரிக்கின்றபோது நடைபெற்ற விடுபாடொன்றாகும்.

(இ) ஆராயப்படுகின்ற ஆண்டினுள் செலுத்தப்பட வேண்டிய (2012 திசெம்பர் 13 முதல் 2012 திசெம்பர் 31 வரை) ஆராய்ச்சி உதவியாளரின் கொடுப்பனவு ரூபா 17,250 அல்ல ரூபா 11,250 மற்றும் அதன் சார்பில் செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் ரூபா 1,500 அல்ல ரூபா 900 கணக்குகள் தயாரிக்கின்றபோது விடுபட்டிருந்தது.

கவனிக்க:- இக் கணக்காய்வு விசாரணை 14(2) (சீ) வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு பதில் அளிக்கின்றபோது ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது.

### 2.2.3 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமை

(அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம்

| | |
|---|---|
| நிதிச் சட்டத்தின் 14(1) வாசகம் மற்றும் 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பந்தி | இதற்கு முன்னரும் சுட்டிக்காட்டியுள்ளவாறு நிறுவனத்தில் நீண்ட காலமாக நிலவிவருகின்ற பணியாட்டொகுதி பற்றாக்குறையே இத் தாமதத்திற்கு காரணமாக அமைந்தது. மேற்படி பணியாட்டொகுதி பற்றாக்குறை தொடர்ந்தும் தீர்க்கப்படாதிருந்த போதிலும் 2012 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையை 2013.05.10 ஆம் திகதி கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு வழங்க இயலுமாயிருந்தது. |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடீ 12ஆம் இலக்க பகிரங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை 6.5.3 பந்தி | <u>தற்போதைய நிலைமை</u><br>2010 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2013.01.30 ஆம் திகதி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டதோடு, 2011 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை 2013.10.22 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (இ) 2011 பெப்ருவரி 9 ஆம் திகதிய 13/2008(iv)ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 2வது பந்தி | தாபனப் பணிப்பாளர் ஒருவர் மேலதிக செயலாளர் அல்லது அதற்கு சமமான தரத்திற்கு உரித்தாகின்றாரேயன்றி திணைக்களத் தலைவர் அல்லது அதற்கு சமமான தரத்திற்கு உரித்தாக மாட்டார் என்பதால் அதற்குரிய எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 13/2008 இன் பிரகாரம் எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படுகின்ற போது ஆணைக்குழு இந்த அடிப்படையிலிருந்தே செயலாற்றியுள்ளது. |

(ஈ) நிதிப் பிரமாணங்கள்

| | |
|---|---|
| நிதிப் பிரமாணங்கள் - இல. 225 | 2013 சனவரி மாதம் முதல் ஆணைக்குழுவின் அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் கொடுப்பனவுச் சிட்டைகள் தயாரிக்கப்படுகின்றன. |
| நிதிப் பிரமாணங்கள் - இல. 756 | 2012 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொருட்கள் கணிப்பீட்டு அறிக்கையைத் தயாரித்தல் தற்போது முடிவுறுத்தப்பட்டுள்ளது. |

**2.2.4** கருத்துவேற்றுமைக்கு ஏதுவாகின்ற விடயங்கள்

குறித்த மீளாய்வு அறிக்கையைத் தயாரிப்பதற்குத் தேவையான தரவுகள் மற்றும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஊக்குவிக்கும் பொருட்டே உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளதோடு, இதற்கு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி ஊக்குவிப்புக் கொடுப்பனவின் காரணமாக தேவையான தரவுகள் மற்றும் தகவல்களைப் பெறுதல் வசதியாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் அமைந்தது.

## 4. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

ஆணைக்குழுவானது ஆண்டின் மூன்றாவது காலாண்டு வரையிலான பௌதீக செயலாற்றுகை அறிக்கையைத் தயாரித்துள்ளது. ஆயினும் இறுதிக் காலாண்டில் ஏற்பட்ட வேலைப்பழு மற்றும் காணப்பட்ட பணியாட்டொகுதியினர் மேலும் குறைவடைந்தமையால் முழு ஆண்டுக்குமான மேற்படி அறிக்கையைத் தயாரித்தல் தாமதமடைந்தது.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

மேற்படி பதவி ஆணைக்குழுவின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் பதவியாகையால் அதனை வைத்திருத்தல் அத்தியாவசியமாகும். தற்போது புதியதொரு ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதால் அப் பதவிக்காக பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டு பணிப்பாளர் ஒருவரை நியமிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

1994 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க விஞ்ஞான, தொழில்நுட்ப மேம்பாட்டுச் சட்டத்தின் 5 (இ) வாசகத்தின் பிரகாரம் “விஞ்ஞான, தொழில்நுட்ப நிறுவனங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு” மட்டுமே எமக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இந்த மீளாய்வுகளின் மூலம் கண்டறியப்படுகின்ற விடயங்களை அறிக்கையொன்றின் மூலம் நாம் குறித்த நிறுவனத்துக்கு ஒப்படைப்பதோடு, அவ்வறிக்கையின் ஒரு பிரதி தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி அமைச்சுககு சமர்ப்பிக்கப்படும். இந்த அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விதப்புரைகளை செயற்படுத்தல் அந்த ஏற்புடைய நிறுவனங்களின் பொறுப்பாகும். அவர்கள் அந்த விதப்புரைகளை செயற்படுத்துகின்றார்களா இல்லையா என்பதை ஆராய்வதற்கான அதிகாரம் எமது நிறுவனத்திற்கு வழங்கப்படவில்லை.

தற்போதைய நிலைமை

இது தொடர்பில் நாம் விஞ்ஞான தொழில்நுட்ப நிலையத்தின் நிகழச்சித்திட்டங்களில் பங்கேற்பவர்களிடமிருந்து பெறுகின்ற அறிக்கையில் மேற்படி பயிற்சியின் ஊடாக அவர்களது ஆராய்ச்சிகள் / கடமைகளுக்கு பெறக்கூடிய பங்களிப்பை சேர்த்துக்கொள்ளுமாறு ஆணைக்குழு அவர்களை விழிப்புணர்வூட்டியுள்ளது. இதன் மூலம் மேற்படி விஞ்ஞானிகள் / உத்தியோகத்தர்கள் பெறுகின்ற அறிவு மற்றும் பயிற்சியின் ஊடாக நாட்டின் விஞ்ஞான, தொழிற்நுட்ப நடவடிக்கைளின் மூலம் அபிவிருத்திக்குக் கிடைக்கின்ற பங்களிப்பை மதிப்பிட முடியுமாயிருக்கும்.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ஆணைக்குழு இலாபத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்ற ஒரு நிறுவனமல்ல. ஆதலால், நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படவில்லை. செயலமர்வுகளில் பங்கேற்கின்ற ஒன்றியத்தின் அங்கத்தவர்களிடமிருந்து குறிப்பிட்டதொரு பங்கேற்புக் கட்டணம் அறவிடப்படுவது, செயலமர்வுகளிலிருந்து கிடைக்கின்ற பயன்களின் காரணமாக பங்கேற்கின்ற அங்கத்தவர்களை மாத்திரம் தெரிவு செய்வதற்கும் அதன் மூலம் செயலமர்வுக்குச் செலவாகின்ற நிதியைக் குறைத்துக்கொள்ளும் மூலோபாயமாகவும் ஆகும்.

## 4.5 பணியாட்டொகுதி நிர்வாகம்

நடைமுறைப் பணியாட்டொகுதியில் பதவிகளுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டதான உத்தியோகத்தர்கள் இல்லையென்பதோடு, 5 பதவிகளில் மாத்திரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. பணிப்பாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக பத்திரிகை அறிவித்தல்களை வெளியிடுவதற்கு தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்பூட்டல் தொழில்நுட்ப/தரவுத் தள உதவியாளர் பதவிக்கும் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கும் ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சிரேஷ்ட விஞ்ஞானி பதவிகள் இரண்டினதும் ஆட்சேர்ப்பு நடைமுறையைத் திருத்தி அதற்கான அனுமதியைப் பெறுவதற்கு முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அதனை சம்பள, பதவியணியினர் ஆணைக்குழுவின் கருத்துக்களைப் பெறும் பொருட்டு ஆற்றுப்படுத்தியுள்ளது. ஆணைக்குழுவின் பிரதான மற்றும் அத்தியாவசிய பதவிகள் மூன்றின் வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு அனுமதி வழங்குதல் இதுவரை தாமதமடைந்துள்ளமை ஆணைக்குழுவின் செயலாற்றுகையில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கவனிக்க:- இக் கணக்காய்வு விசாரணை 14(2) (சீ) வரைவானது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கு பதில் அளிக்கின்றபோது ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட விளக்கத்தின் அடிப்படையில் திருத்தப்பட்டுள்ளது.

**தற்போதைய நிலைமை**

தொடர்பூட்டல் தொழில்நுட்பம்/தரவுத் தள உதவியாளர் பதவியின் வெற்றிடங்கள் தற்போது நிரப்பப்பட்டு பெண் உத்தியோகத்தர் ஒருவர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளார் என்பதோடு, முகாமைத்துவ உதவியாளர் பதவியின் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தற்போது நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

இது தொடர்பில் அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் அறிவூட்டப்பட்டுள்ளார்.

## 5.2 வரவு செலவுத்திட்டக் கட்டுப்பாடு

ஆணைக்குழுவின் விஞ்ஞான பணியாட்டொகுதியினரின் பற்றாக்குறை மற்றும் புதிய ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படாமை காரணமாக 2012 ஆம் ஆண்டில் செயற்பாட்டுத் திட்டத்தில் ஒருசில பணிகளை (உதா: BICOST) திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாமற்போனமையால் நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை வினைததிறனுடன் பயன்படுத்தும் பொருட்டு 2012 ஆம் ஆண்டின் செயற்பாட்டுத் திட்டம் திருத்தப்பட்டது.

அதன் பெறுபேறாக செயற்பாட்டுத் திட்டத்தின் ஒருசில பணிகளின் பொருட்டு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 65% மேற்படி நிலைமையின் கீழ் மேற்கொள்ள முடியுமான வேறு பணிகளுக்காக மாற்றப்பட்டது.

2012 செயற்பாட்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை மேற்கொள்கின்றபோது மேலெழுந்த பிரச்சினைகள் அந்தந்த செயற்பாடுகளின் கீழ் தரப்பட்டுள்ளது. இப் பிரச்சினையின் காரணமாக ஆணைக்குழுவின் நிதியியல் செயலாற்றுகை 46% க்கு மட்டுப்பட்டதாயிருந்தது.

| | |
|---|---|
| 1) **ஈராண்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாடு** | தேவையான வழிகாட்டல்கள் மற்றும் ஆலோசனைகளைப் பெறுவதற்கு ஓர் ஆணைக்குழு இல்லாதிருந்ததாலேயே இம்மாநாட்டை நடத்த இயலாதிருந்தது. |
| 2) **விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் மீளாய்வு** | 2012 ஆம் ஆண்டுக்காக மீளாய்வு செய்வதற்கு உத்தேசமாயிருந்த நான்கு நிறுவனங்களும் அதன் பொருட்டு வழங்க வேண்டியிருந்த சுய மதிப்பீட்டு அறிக்கைகளை ஆணைக்குழுவுக்கு வழங்குகின்றபோது நேரிட்ட தாமதத்தின் காரணத்தினால் உரிய காலத்தில் இந் நிறுவனங்களை மீளாய்வு செய்ய இயலாதிருந்தது. ஆதலால் இந்த 4 நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தை மாத்திரமே மீளாய்வு செய்ய முடியுமாயிருந்தது. ஆயினும் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்த விசேட வேண்டுகோளின் பிரகாரம் இத் திணைக்களம் 2012 மே 10 மற்றும் 11 ஆம் திகதிகளில் மீளாய்வு செய்யப்பட்டது. இறுதி கணக்காய்வுத் திகதியாகின்றபோது கூட மீளாய்வொன்றுக்கான இறுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்தது இறுதி மீளாய்வு அறிக்கை ஆணைக்குழுவுக்கு கிடைக்காதிருந்தமையினாலாகும். |

| | |
|---|---|
| 3) **தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மீளாய்வு** | மேற்படி மீளாய்வுக்கு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களிலிருந்து தேவையான தரவுகளையும் தகவல்களையும் பெறுவதற்காக வினாக் கொத்தொன்று 2012 பெப்ருவரி மாதம் 03 ஆம் திகதி அந் நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டது. பதில் வழங்குவதற்காக 2012 மார்ச் 15 இறுதித் திகதியாகக் குறிக்கப்பட்டிருந்த போதிலும், சில நிறுவனங்கள் பதில் வழங்குகின்றபோது நேரிட்ட தாமதத்தின் காரணமாகவும் சில தரவுகளின்/தகவல்களின் துல்லியத்தன்மையை மீண்டும் உறுதி செய்துகொள்ள நேரிட்டமையாலும் தகவல்/தரவுகளைச் சேகரிக்கின்ற பணி 2012 ஆகஸ்ட் மாதத்திலேயே முடிவடைந்தது. இதன் காரணமாக மேற்படி அறிக்கையைத் தயாரித்தல் தாமதமடைந்தது. 2012 செப்தெம்பர் மாதமளவில் இடைக்கால மீளாய்வு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு முடிவடைந்தது. அதன் இறுதி அறிக்கை தற்போது சரிபார்க்கப்பட்டு வருகின்றது. |
| 4) **விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கையாக்கல் கற்கைக் குழு** | மேற்படி செயற்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டு போதியளவு விஞ்ஞானப் பணியாட்டொகுதியினர் ஆணைக்குழுவிடம் இன்மையால் இப் பணியை ஒத்திவைக்க நேரிட்டது. (தேவையான விஞ்ஞான பணியாட்டொகுதியினரை ஆட்சேர்க்கும் பொருட்டு 2012.07.08 ஆம் திகதி விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதிலும் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்த எந்தவொரு விண்ணப்பதாரரும் இல்லாதிருந்தமையால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு இயலாதிருந்தது. மேலும், மேற்படி பதவிக்காக வேண்டப்படுகின்ற தகைமைகளைத் திருத்தும் பொருட்டு தேசிய சம்பள, பதவியணியினர் ஆணைக்குழுவுடனும் முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்துடனும் சேர்ந்து தற்போது செயலாற்றப்பட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| 5) | **சர்வதேச விஞ்ஞான, தொழில்நுட்ப செயற்பாடுகள்** | BIMSTEC நாடுகளின் தொழில்நுட்பப் பரிமாற்றத்தின் பொருட்டு தாபிக்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்படைப்பு வசதிகள் செயற்பாட்டின் பொருட்டு இவ்வாறு நிதி ஒதுக்கப்பட்ட போதிலும் இதன் பொருட்டு தலைமையேற்று செயற்படுகின்ற வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு இப் பணிகளின் பொருட்டு 2012 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் பங்களிப்பை வேண்டாதிருந்தமையால் அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி செலவிடப்படவில்லை. |
| 6) | **ஒருங்கிணைந்த நிறுவனச் செயற்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள்** | ஆணைக்குழுவில் விஞ்ஞான பணியாட்டொகுதியின் பற்றாக்குறையே மேற்படி செயற்பாடுகளுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை ஒத்திவைப்பதற்கும் காரணமாயிருந்தது. |

கவனிக்க: ஆரம்ப கணக்காய்வு விசாரணையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடு நிதியியல் முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் காரணியாக பயன்படுத்தப்படவில்லை என்ற கூற்றுக்கான பதில் கீழே தரப்பட்டுள்ளது.

எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட மேற்படி பிரச்சினைகளின் காரணமாக வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டை நிதியியல் முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் காரணியாக பயன்படுத்த இயலவில்லை.

**தற்போதைய நிலைமை**

2013.04.22 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதியினால் புதியதொரு தலைவரும் ஆணைக்குழு அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டனர் என்பதோடு, தற்போது ஈராண்டு மாநாடு உள்ளிட்ட ஏனைய விஞ்ஞான, தொழில்நுட்ப செயற்பாடுகளுக்கு ஏற்புடையதான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

## 6. முறைமை மற்றும் கட்டுப்பாடு

மேற்படி நிர்வாகத்துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதற்கு ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்.